**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

வேளாண்மை - மத்திய அரசுத் துறைத் திட்டம் - மேம்பட்ட பயிர் உற்பத்தித் தொழில்நுட்பவியலை அனைவரும் அறியச் செய்யும் வகையில் பரப்புவது உட்பட நெல் சிறுதளைப் பை வழங்கல் திட்டம் - 2000-2001 ஆம் ஆண்டில் திட்டத்தைச் செயல்படுத்துதல் - அனுமதி வழங்குதல் ஆணைகள் - பிறப்பிக்கப்படுகின்றன.

கோப்பு எண் 19432/ சி /2000

---

**வேளாண்மைத் (வே.உ. மிமி) துறை**

அரசு ஆணை (நிலை) எண்: 445 நாள்: 5.12.2000
படிக்கவும்:

1) வேளாண்மைத் துறையின் 25.10.99 ஆம் நாளிட்ட 462 ஆம் எண் அரசாணை

2) புது டில்லி, மத்திய அரசு, வேளாண்மைத் துறை அமைச்சகத்திடமிருந்து (வேளாண்மை கூட்டுறவுத் துறை)வரப்பெற்ற 20.4.2000ம்
நாளிட்ட 3-2/2000-சிகி க்ஷி ஆம் எண் கடிதம்.

3) வேளாண்மைத் துறை இயக்குநரிடமிருந்து வரப்பெற்ற 5.7.2000 ஆம் நாளிட்ட மிகிறி4/290073/99 ஆம் எண் கடிதம்.

ஆணை

மேம்பட்ட பயிர் உற்பத்தித் தொழில்நுட்பவியலை அனைவரும் அறியச் செய்யும் வகையில் பரப்புவது உட்பட, மத்திய அரசுத் துறைத்திட்டத்தின்கீழ் நெல் சிறுதளைப்பை வழங்கல் திட்டத்தை 1999-2000 ஆம் ஆண்டில், ரூ.15.00 இலட்சம் செலவில் செயல்படுத்துவதற்கு, மேலே பார்வை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் அனுமதி வழங்கப்பட்டது.

2) மேலே பார்வை 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தில், 2000-2001ஆம் ஆண்டில், ரூ.26.66 இலட்சம் மூலதனச் செலவில், நெல் சிறுதளைப்பை வழங்கல் மற்றும் செயல் விளக்கத் திட்டத்தைச் செயல்படுத்தவும், மாநில அளவில் பயிற்சித் திட்டத்திற்கு ஏற்பாடு செய்யவும், தேசிய அளவில் சிறப்புப் பணி நோக்குப் பயிற்சித் திட்டத்திற்கு ஏற்பாடு செய்யவும் மத்திய அரசு, நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. வேளாண்மைத் துறை இயக்குநர் மேலே பார்வை 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தில், மேற்சொன்ன திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நிதி அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) மேற்சொன்னத் திட்டத்திற்குச் செலவு செய்ய 2000-2001 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.24.71 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

4) அரசு இது குறித்து கவனமாகப் பரிசீலனை செய்த பின்னர், 2000-

2001ஆம் ஆண்டில் மேம்பட்ட பயிர் உற்பத்தித் தொழில்நுட்பவியலை அனைவரும் அறியச் செய்யும் வகையில் பரப்புவது உட்பட, மத்திய அரசுத் திட்டமான நெல் சிறுதளைப்பை வழங்கல் திட்டத்தின் கீழ் வரும், நெல் சிறுதளைப்பை வழங்கல் மற்றும் செயல்விளக்கத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு, வேளாண்மைத் துறை இயக்குநருக்கு, ரூ.26.66 இலட்சம் (ரூபாய் இருபத்தாறு இலட்சத்து அறுபத்தாறாயிரம் மட்டும்) வழங்க அனுமதியளிக்கிறது. அதன் விவரம் வருமாறு:-

விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

| விதை நெல் வகை | உழவர்களின் | திட்ட இலக்கு | நிதிச் செலவு |
|---|---|---|---|
| | வகை | (நெல் சிறுதளைப் | (ரூபாய் இலட்சத்தில்) |
| | | பையின் எண்ணிக்கை | |
| (1) | (2) | (3) | (4) |
| 1) ஏ,எஸ்.டி.19 | | | |
| 2) ஏ,எஸ்.டி.20 | பொது | 49,000 | 18.66 |
| 3) ஏ. டி.ட்டி 42 | | | |
| 4) ஏ.டி.ட்டி 43 | ஆதி திராவிடர் | 14,000 | 5.33 |
| 5) எம்.டி.யு 5 | பழங்குடியினர் | 7,000 | 2.67 |
| 6)டி.கே.எம்.11 | | | |
| 7)சி.ஓ.46 | | | |
| 8) புசா 677 | | | |
| | | | |
| மொத்தம் | | 70,000 | 26.66 |
| | | | |

5) மாநில அளவில் மேம்பட்ட தானியப் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பவியலில் குறுவைப் பருவத் தானியங்கள் தொடர்பாக 3 முறையும், சம்பா பருவ/கோடைப் பருவ காலத் தானியங்கள் தொடர்பாக மூன்று முறையும் ஆக மொத்தம் ஆறு முறை மாநில அளவில் பயிற்சியளிக்க, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்யும் என்றும் அரசு உத்தரவிடுகிறது. இதற்காகும் செலவுத் தொகையை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், நேரடியாக, மத்திய அரசு, நெல் பயிர் மேம்பாடு இயக்குநரிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளும். ஹைதராபாத், நெற் பயிர் ஆராய்ச்சித் துறை இயக்ககத்தின் திட்ட இயக்குநர், நெல் உற்பத்தித் தொழில்நுட்பவியல் குறித்து, தமிழ்நாடு அரசு, வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலகத்தினைச் சேர்ந்த 5 அதிகாரிகளுக்குத் தேசிய அளவில் சிறப்புப் பணி நோக்குப் பயிற்சி (ஷிஜீமீநீவீணீறீ ளிக்ஷீவீமீஸீமீணீமீவீஷீஸீ ஜிக்ஷீணீவீஸீவீஸீரீ நிக்ஷீஷீரீக்ஷீணீனீனீமீ) அளிப்பார். நெல் சிறுதளைப்பை வழங்கல் மற்றும் செயல்விளக்கத் திட்டத்திற்காகும் செலவு, தொடக்கத்தில், மாநில நிதியிலிருந்து செய்யப்படும், அதன் பின்னர் இச்செலவு மததிய அரசு, நெல் உறபத்தி இயக்ககத்திடமிருந்து ஈடுசெய்யப்படும்.

6) இத்திட்டத்தைச் செயல்படுத்தும் போது, பின்வருவனவற்றை பின்பற்றுமாறு, வேளாண்தைத் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

1) மத்திய அரசின் வழிகாட்டிக் குறிப்புகளைப் பின்பற்றி, குறைவு ஏதுமின்றித் திட்ட இலக்கை எய்த வேண்டும்;

2) ஒவ்வொரு நெல் சிறுதளைப்பையுடனும் குறிப்பிட்ட ரக பயிர் உற்பத்தியில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் அடங்கிய துண்டு வெளியீட்டினை இணைத்து வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

3) விதை நெல் சிறுபைகள் வழங்கும் வகையில் ஏற்படும் செலவுத் தொகையில் 10 சதவீதத்தை உழவர்களிடமிருந்து வசூலித்து, அத்தொகையை, நவீன நெல் உற்பத்தித் தொழில்நுட்பவியல் விவரங்களை உழவர்களிடையே

பரப்புவதுற்கு, வீடியோப் படங்கள் முதலியவற்றைத் தயாரிக்கவும் நெல் சாகுபடி விவரங்கள் அடங்கிய இதழ்களை வெளியிடவும் உழவர் திருவிழா "கிசான் மேளா" நடத்தவும் ஏற்பாடு செய்யப் பயன்படுத்த வேண்டும்;

4) செலவை ஈடுசெய்வதற்காக 2000 அக்டோபரில் குறுவைப் பருவத்தின்போது வழங்கப்பட்ட சிறுதளைப்பைகளுக்கும், 2001 பிப்ரவரிக்குள் சம்பா/கோடைப் பருவத்திற்காக வழங்கப்பட்ட சிறுதளைப்பைகளுக்கும் பயன்பாட்டுச் சான்றிதழுடன் தொகையை ஈடுசெய்யக் கோரும் ஒருமொத்தப் பட்டியலை பாட்னா, அரிசி மேம்பாட்டு இயக்கக இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

5) மாதப் பணி முன்னேற்ற அறிக்கையை பாட்னா, அரிசி மேம்பாட்டு இயக்கக இயக்குநருக்கு அனுப்பவேண்டும். அதன் நகலை, புதுடில்லி, கிரிஷிபவனில் உள்ள வேளாண்மை அமைச்சகத்தைச் சேர்ந்த வேளாண்மை கூட்டுறவுத்துறையின் வேளாண்மை ஆணையாளருக்கும், சென்னை-9 இல் வேளாண்மைத் துறை அரசு செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

6) மத்திய அரசு பிறப்பித்த வழிகாட்டிக் குறிப்புகளின்படி, கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் நடத்திய பயிர் உற்பத்தித் தொழில் நுட்பவியல் குறித்து மாநில அளவிலான பயிற்சிக்கும், ஐதராபாத், அரிசி ஆராய்ச்சி இயக்ககம் நடத்திய தேசிய அளவிலான சிறப்புப் பணிநோக்குப் பயிற்சிக்கும் அதிகாரிகளை முகமையில் அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

7) மத்திய அரசின் வழிகாட்டிக் குறிப்புகளின்படி திட்டத்தை நுணுக்கமாக மேற்பார்வை செய்வதற்காக கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டும்

7) அரசிடமிருந்து ஒப்புதலை எதிர்பார்த்து மேற்சொன்ன திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, வேளாண் இணை இயக்குநர்கள் அனைவருக்கும் ஆணைகள் பிறப்பித்த வேளாண்மைத் துறை இயக்குநரின் செயலுக்கு அரசு பின்னேற்பு அளிக்கிறது

8) 2000.2001 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்குக் கூடுதலாக ஏற்படும் செலவு ரூ.1.95 இலட்சம், 2000-01 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில்/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்க்கப்படும். இவ்வாறு சேர்க்கப்படும் வரை செலவு செய்வதற்கு வேளாண்மைத் துறை இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படலாம்,

9) பயிற்சிக்காக முகமையில் அனுப்பப்பட்ட அதிகாரிகளின் பயணப்படி மற்றும் நாட்படி குறித்த செலவு, அவர்களுடைய சம்பளம் மற்றும் படிகள் பெறப்படும் பணிக்கணக்குத் தலைப்பின் கீழ் பற்று எழுதப்படும்.

10) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகப் பதிவாளர், வேளாண்மை இயக்குநருடன் கலந்தாலோசித்து மாநில அளவிலான பயிற்சியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்.

11) மேலே பத்தி 4 இல் அனுமதிக்கப்பட்ட செலவு, பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்றெழுதப்படும்: . அதாவது:

1) விதை சிறுதளைப் பை வழங்கும் திட்டத்தின்கீழ் ஏற்படும் செலவில் 70% (ரூ.18.66 இலட்சம்) பின் வரும்கணக்குத் தலைப்பின் கீழ் எழுதப்படவேண்டும்.

"2415 வேளாண்மை ஆராய்ச்சிக் கல்வி - 01. பயிர் வளர்ப்பு - 004.ஆராய்ச்சி ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் -மிமிமி.மத்திய அரசு பொறுப்பேற்பவை-கிஷி. அரிசி சிறுதானியங்கள் ஆகியவற்றுக்கான சிறுதளைப்பை வழங்கும் திட்டம் - வேளாண்மை இடுபொருள்கள் வாங்குதல் - (த.தொ.கு.எண் 2415-01-004- ஷிகி. 6904)

2) விதை சிறுதளைப் பை செயல்விளக்கத் திட்டத்தின்கீழ் ஏற்படும் செலவில் 30% (ரூ.8.00 இலட்சம்) பின்வரும் கணக்குத் தலைப்பில் எழுதப்படவேண்டும்.

"2401-00 - பயிர் வளர்ப்பு - 796 பழங்குடியினர் பகுதி துறைத் திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் -மிமிமி மத்திய அரசு பொறுப்பேற்பவை -ஷிகி. மும்முரப்பயிரிடுதலுக்கான திட்டப் பணிகள் - மோட்டாரகதானியங்களைக் குறித்துச் சிறுதலைப்பை செயல்விளக்கத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் பழங்குடியினர் பகுதிகளில் செயல் விளக்கம் - 69.வேளாண் இடுபொருட்கள் கொள்முதல் (த.தொ.கு.2401-00-796 ஷிகி. 6904)"

12) விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகையும் மத்திய அரசின் உதவித் தொகையும் பின்வரும் கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்படவேண்டும்:

0401-00-பயிர் வளர்ப்பு-103.விதைகள்- சிறுதளைப்பை குறித்த செலவை மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெறுதல் (த.தொ.கு.0401-00-103- கியி 0001,)

13) இந்த ஆணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித்துறையின் 10.11.2000 ஆம் நாளிட்ட 50800/நிதி/2000 ஆம் எண்ணுள்ள கடித முறையல்லா அலுவகக் குறிப்பைக் காண்க.

(ஆளுநரின் ஆணைப்படி)

என்.ஆதிமூலம்,

.

அரசுச்
செயலாளர்

பெறுநர்

வேளாண்மை இயக்குநர், சென்னை-5
மத்திய அரசுச் செயலாளர், வேளாண்மை அமைச்சகம், வேளாண்மை கூட்டுறவுத் துறை, கிரிஷிபவன், புதுடில்லி-1
இயக்குநர், அரிசி மேம்பாட்டு இயக்ககம், பாட்னா.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (நீலகிரி மற்றும் சென்னை நீங்கலாக)
பேராசிரியர்- துறைத் தலைவர், அரிசி ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்
முதன்மை மாநிலக் கணக்குத் துறைத் தலைவர், சென்னை-18 (அவர் பெயரில்)
மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை) சென்னை-18 (அவர் பெயரில்)
சம்பளக் கணக்கு அதிகாரி, சென்னை-5

நகல் பெறுவோர்

இயக்குநர், அரசு தகவல் தொகுப்பு மையம், சென்னை-32
கருவூலம், கணக்குகள் துறை இயக்குநர், சென்னை-35
நிதி (வரவு செலவுத் திட்டம் (பொது 1)
வேளாண்மைத் துறை, சென்னை-9
நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரி, வேளாண்மை இயக்ககம், சென்னை-5
திட்டமிடல்-வளர்ச்சித்துறை, சென்னை-9
முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
வேளாண்மை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
இருப்புக் கோப்பு/உதிரி நகல்)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/